16.02.2024

O.S.No.221/2016

வா.சா.1.திரு.பிரான்சிஸ் பாஸ்டியன் த.பெ.பிரான்சிஸ் இருதயராஜ்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**2** மற்றும் **4** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. தாவா சொத்தில் மொத்தம் 2 வீடுகள் உள்ளன. ஒரு வீட்டின் தகவு எண் 8/1C மற்றொரு வீட்டின் கதவு எண்.8/118 என்றால் சரியல்ல, ஒரு வீட்டிற்கு கதவு எண்.8/118 மற்றும் மற்றொரு வீட்டின் கதவு 8/220 ஆகும். கதவு எண்.8/118 எண்கொண்ட வீட்டிற்கு நான் எப்போதாவது வீட்டுவரி செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை, அந்த வீட்டின் கட்டிட வேலை முழுவதும் முடிவடையாததால் நான் வரி செலுத்தவில்லை. கதவு எண்.8/118 எண் கொண்ட வீட்டில் ராஜசேகர் அனுபவத்தில் இருந்து வந்து வரி செலுத்தி வருகிறார் என்றாலும், அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. அமலிக்கு அந்தோணி எழுதி வைத்த உயில் ஆவணத்தில் கதவு எண்.8/118 எண் கொண்ட வீட்டினையும் கட்டுப்படுத்திதான் எழுதி வைத்துள்ளார் என்றால் அந்தோணி காலத்தில் கதவு எண்.8/118 என்ற எண் கொண்ட ஒரு வீடே கிடையாது.

2. நான் தாவா சொத்தில் 700 சதுர அடியில் வீடு கட்டியுள்ளதாக சொல்வதால் எப்போது அந்த வீட்டை கட்டினேன் என்றால் 2010 ல் கட்டினேன். அந்த வீட்டிற்கான அப்ரூவல் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன், அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அசல் வழக்கு எண்.3/2017 ல் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது போல் தாவா சொத்தில் நான் அப்ரூவல் வாங்கி வீடு கட்டவில்லை என்றாலும், அந்த வீடானது அந்தோணி காலத்தில் கட்டப்பட்ட வீடு என்றாலும் சரியல்ல. பட்டா எனது பெயருக்கு 2010 ம் ஆண்டு மாறியது. சர்வே எண்.385/1B2B ல் கட்டுப்பட்ட சொத்திற்கு அமலி மற்றும் ஜகுபர் பெயரில் பட்டா மாறியுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த பட்டா போலியாக சதிசெய்து மாற்றிவிட்டதால் அது குறித்து புகார் அளித்து அந்த பட்டா மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் ரத்து செய்யப்பட்டு, அன்பரசனுக்கு சொத்து கிடைத்து அவரிடம் இருந்து நான் கிரையம் பெற்றேன்.

3. சர்வே எண்.385/1B2B என்பது உட்பிரிவாகி 1 ஏக்கர் மட்டும் சர்வே எண்.385/4 என ராஜசேகர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான், அதுவும் போலியாக சதி செய்து மாற்றிவிட்டார்கள், அந்த பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டது. தாவா சொத்தில் 2 கட்டிடங்கள், மாந்தோப்பு, போர்வெல் ஆகியவை உள்ளன. அந்தோணி, அமலிக்கு எழுதி வைத்த உயில் அந்தோணி இறந்த பின்பு ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு உயில் ஊர்ஜிதத்திற்கு வந்ததால் தான் அமலி பெயரில் தாவாசொத்து கூட்டுபட்டாவாக ஏற்பட்டது என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி அமலி, தனது கணவர் 2 ம் பிரதிவாதியான ராஜசேகருக்கு எழுதி வைத்த தானசெட்டிடல்மெண்ட் அடிப்படையில் தான் ராஜசேகர் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்தோணி எழுதி வைத்த உயில் பிரகாரம் 1 ஏக்கர் நிலம் அளந்து கல்கால் ஊன்றப்பட்டுள்ளதா என்றால் அந்த போலி உயிலின் படி அந்த 1 ஏக்கர் நிலத்தை இன்னும் அடையாளப்படுத்தவில்லை. அந்த உயிலில் கட்டுப்பட்ட சொத்தில் உள்ள கதவு எண்.8/118 எண் கொண்ட வீட்டில் ஒரு பெண் காவலாளியாக இருந்த அந்த சொத்தில்

உள்ள மாந்தோப்புகளை பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல.கதவு எண்.8/118 எண் கொண்ட வீட்டில் யார் உள்ளார்கள் என்றால் யாருமே இல்லை.

4. யார் கொடுத்த மனுவின் அடிப்படையில் நான் கூறியவாறு பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் ஜேசுராஜ் என்ற அன்பரசன் கொடுத்த புகாரின் அடிப்படையில் ரத்து செய்யப்பட்டது. உயர்நீதிமன்ற வழக்கு எண்.65/2010 ல் வழங்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் அந்த பட்டா ரத்து செய்யப்பட்டது. அந்த உயர்நீதிமன்ற நடவடிக்கையில் ராஜசேகரும், அமலியும் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். ஆர்டிஓ உத்தரவில் அனைத்து பட்டாவும் ரத்து செய்யப்பட்டு, அந்த சொத்து அந்த பட்டாக்கள் ஏற்படுவதற்கு முன்பிருந்த நிலைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முறையான விசாரணை நடத்தாமல் ஆர்டிஓ அந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார் என்றால் சரியல்ல.